


06.01. 2025

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்டுவதற்கான பாதையில் நம்நாடு பயணிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- கர்நாடக மாநிலத்தில் இருவருக்கு HMPV வைரஸ் நோய்தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது.
- தமிழக சட்டப்பேரவையில் நடப்பாண்டின் முதல் கூட்டத்தொடர் வரும் 11-ம் தேதிவரை நடைபெறும் என்று பேரவைத்தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.
- பொங்கல் பண்டிகையை ஒட்டி சென்னையிலிருந்து, வரும் 10-ம் தேதிமுதல் 13-ம் தேதிவரை, 14 ஆயிரத்து 104 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்டுவதற்கான பாதையில் நம்நாடு பயணித்து கொண்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

ரயில்வே துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்ததுடன், புதிய ரயில்வே திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர்,

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்ட இந்திய ரயில்வேயின் வளர்ச்சி இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

நாட்டில் விரைவில் ரயில்பாதைகள் 100 சதவிகிதம் மின்மயமாக்கப்பட உள்ள நிலையில் ரயில்வே விரிவாக்க பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

ஜம்மு ரயில் நிலையம், தெலங்கானாவில் சாரளப்பள்ளி புதிய முனையம் ஆகியவற்றை துவக்கி வைத்த அவர், ஒடிஷா கிழக்கு கடற்கரை ரயில்வேயின் ராயக்கடா கோட்ட ரயில்வே அலுவலக கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

புதுதில்லியில் வர்த்தக சங்க பிரதிநிதிகள் உடனான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் மத்திய நிதி மற்றும் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்றது.

2025-26ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் இதில் இடம்பெற வேண்டிய வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் குறித்து வர்த்தக பிரதிநிதிகளுடன் அமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார்.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி நிதித்துறை, முதலீடு மற்றும் பொதுசொத்து மேலாண்மை, பொருளாதார விவகாரங்கள், தொழிலாளர் அமைச்சக பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், இந்தியா வந்துள்ள அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஜேக்சலிவனை இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

சர்வதேச பிராந்திய அளவிலான ஒத்துழைப்பையும், நல்லுறவையும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் இதில் இடம்பெற்றன.

இந்திய - அமெரிக்க நட்புறவை முன்னெடுத்துச் செல்லும் திரு.ஜேக் சலீவனின் தனிப்பட்ட முயற்சிகளை டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தமது சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

இதனிடையே நம்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், திரு, ஜேக் சலீவனை இன்று சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இருதரப்பு நட்புறவு மேம்பாட்டு தொடர்பான பேச்சுக்கள் இதில் இடம்பெறும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖

HMPV

சீனாவில் கண்டறியப்பட்ட HMPV வைரஸ் தொற்று கர்நாடக மாநிலத்தில் இருவருக்கு கண்டறியப்பட்டு உள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நல அமைச்சகத்தின் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது.

3 மாத பெண் குழந்தைக்கும், 8 மாத ஆண் குழந்தைக்கும் HMPV தக்குதல் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இந்நோய் தாக்குதலிலிருந்து இவ்விரு குழந்தைகளும் மீண்டு வருவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச பயணம் எதையும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மேற்கொள்ளவில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே வைரஸ் தாக்குதலை எதிர்கொள்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட ஒத்திகை பயிற்சி மூலம் இந்நோய் தாக்குதலை எதிர்கொள்வதற்கான முழுதிறன்களுடன் நாடு தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவையின் நடப்பாண்டின் முதல் கூட்டத்தொடர் இன்று கூடிய நிலையில் ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு வாசித்தார்

நாட்டின் 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

பொருளாதார வளர்ச்சி மருத்துவம், கல்வி, சமூக நலன் மேம்பாட்டில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் பேரவை தலைவர் தெரிவித்தார்.

வரும் 2030-ம் ஆண்டிற்குள் தமிழகத்தை ஒருடிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்துவதை இலக்காக கொண்டு தமிழக அரசு செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

மகளிர் விடியல் பயணத்திட்டத்தில் பெண்களின் தினசரி பயண எண்ணிக்கை 57 லட்சமாக அதிகரித்துள்ளதாக கூறியஅவர்,

தமிழக அரசின் காலை உணவு திட்டத்தின் மூலம் 34 ஆயிரத்து 987 தொடக்கப் பள்ளிகளில் உள்ள பதினேழரை லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் பயன்பெறுவதாக குறிப்பிட்டார்.

அனைவருக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்கச் செய்யும் நோக்குடன் தொழிற்முறை படிப்புகளில் அரசு வழங்கியுள்ள 7.5 சதவிகித ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில், 35 ஆயிரத்து 530 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளதாக அவர் கூறினார்.

புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன், இன்னுயிர் காப்போம், மக்களைத் தேடி மருத்துவம், கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் எடுத்துரைத்தார்

தமிழ்நாட்டில் 10 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும் என்று கூறியஅவர்,

தமிழகத்தில் அடுத்த 2 ஆண்டுகளில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்படும் என்றார்.

சிறு குறு நிறுவனங்களுக்கு 4 ஆயித்து 115 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது உள்ளிட்ட மாநில அரசின் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை பேரவை தலைவர் திரு.அப்பாவு வாசித்த பின்னர், அவை முன்னவர் திரு. துரைமுருகன் தீர்மானம் ஒன்றை கொண்டுவந்தார்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளது மட்டுமே அவை குறிப்பில் இடம்பெற செய்யவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பின்மூலம் நிறைவேற்றப்பட்டது.

பேரவையின் மாண்பையும், மரபையும், விதிகளையும் காப்பாற்றும் வகையிலேயே மாநில அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

கூட்டத்தொடர்

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத் தலைவர் திரு. அப்பாவு, தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 11-ம் தேதிவரை நடைபெறும் என்று கூறினார்.

பேரவையில் நாளை மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன் மோகன் சிங்,

மறைந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரின் மறைவிக்கு இரங்கல் தெரிவிக்கப்படும் என்றார்.

வரும் 8-ம் தேதிமுதல் 3 நாட்களுக்கு ஆளுநர் உரை மீதான விவாதம் இடம்பெறும் என்றும்,

வரும் 11-ம் தேதி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளிப்பார் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

இறுதிவாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம் என்று கூறியஅவர், இப்பட்டியலில் 3 ஆயிரத்து 740 வெளிநாடுவாழ் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

பல்வேறு மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இப்பட்டியலை வெளியிட்டனர்.

திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 9 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலில் 23 லட்சத்து 47 ஆயிரத்து 852 வாக்காளர்கள் இடம்பெற்றிருப்பதாக ஆட்சித்தலைவர் திரு. பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

ஈரோடு மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்ட ஆட்சித்தலைவர் திரு. ராஜகோபால சுன்கரா ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு தயாராகும்

வகையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்டவற்றில் முதல்நிலை சோதனை நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

நெல்லையில் 6 லட்சத்திற்கும மேற்பட்ட ஆண்வாக்காளர்களும், 7 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்வாக்காளர்களும் இடம்பெற்றிருப்பதாக ஆட்சித்தலைவர் திரு. கார்த்திகேயன் கூறியுள்ளார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி வாய்ஸ்

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம் இந்த ஆண்டு இதுவரை ஆயிரத்து 869 காற்றாலை இறகுகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

பொங்கல் பேருந்து

பொங்கல் பண்டிகையை ஒட்டி சென்னையிலிருந்து, வரும் 10-ம் தேதிமுதல் 13-ம் தேதிவரை, 14 ஆயிரத்து 104 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவகங்கர் தெரிவித்துள்ளார்.

கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய 3 பேருந்து முனையங்களிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இப்பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

அதேபோல் வரும் 15-ம் தேதிமுதல் 19-ம் தேதிவரை பிற ஊர்களிலிருந்து மக்கள் சென்னை திரும்ப ஏதுவாக 10 ஆயிரத்து 460 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

ஜல்லிக்கட்டு

ஜல்லிக்கட்டு போட்டிகள் மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் வரும் 14-ம் தேதியும், பாலமேட்டில் 15-ம் தேதியும், அலங்காநல்லூரில் வரும் 16-ம் தேதியும்

நடைபெறவுள்ள நிலையில் இப்பகுதிகளில் முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கான முன்பதிவு இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

அடிலைடில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ஸ்ரீராம்பாலாஜி, மெக்சிகோவின் Miguel Angel Reyes இணை முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது